**PRIMARY SCHOOL**


**SEMESTRAL ASSESSMENT 2**

**TAMIL LANGUAGE PRIMARY 5 - 2013**

**PAPER 1 – COMPOSITION**

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. இஸ்திரிப் போட்டுக்கொண்டு
2. தொலைபேசி ஒலித்தது
3. இஸ்திரிப் பெட்டியை
4. சுவாரசியமாகப் பேசிக்கொண்டு
5. சூடாகிவிட்டது
6. புகை வாடை வருவதை
7. துணி பாழாகிவிட்டது
8. மின்சாரத்தை அடைத்தார்



Class Register Number | | |

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2 - 2013

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 5

BOOKLET A

Name: ____________________ Class: 5 ______

41 Questions

90 Marks

Total Time for Booklets A and B: 1 Hr 40 Mins

| | Marks |
|---|---|
| Booklet A | / 46 |
| Booklet B | / 44 |
| Total | / 90 |
| 100 % | |

Parent's Signature / Date:

INSTUCTIONS TO CANDIDATES

1. Write your Index No. in the boxes at the top right hand corner.
2. Do not turn over this page until you are told to do so.
3. Answer all questions.

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

ஓர் ஊரில் மதியழகர் என்ற வணிகர் வியாபாரம் செய்து பொருளீட்டி வாழ்ந்து வந்தார். அவருக்கு நற்குணங்கள் வாய்ந்த மனைவியும் 1) __________ சிறந்த ஒரு மகனும் இருந்தனர். ஒரு சமயம் வாணிபம் செய்ய 2) __________ செல்ல நேர்ந்தது. காரியங்களை முடித்தப்பின் 3)__________ அன்றே வீடு திரும்ப இயலவில்லை. அதனால், அவர் 4)__________ நண்பர் ராமனின் வீட்டில் தங்கினார். அவர்கள் இருவரும் உணவை முடித்துக் கொண்டு, 5) __________ உலாவச் சென்றனர். இருள் வந்ததும் நேரமாகி விட்டதால், அவர்கள் 6) __________ திரும்பினர். களைப்படைந்த இருவரும் உறங்கச் சென்றனர்.

Q1
(1) அறிவு
(2) அறிவில்
(3) அறிவால்
(4) அறிவுக்கு
( )

Q2
(1) அயலூருக்கு
(2) அயலூரில்
(3) அயலூரின்
(4) அயலூரை
( )

Q3
(1) அவருக்கு
(2) அவரின்
(3) அவரை
(4) அவரால்
( )

Q4
(1) தன்னின்
(2) தன்னுடைய
(3) தனக்கு
(4) தன்னால்
( )

Q5
(1) பூங்காவில்
(2) பூங்காவுக்கு
(3) பூங்காவின்
(4) பூங்கா
( )

Q6 (1) வீட்டில்
(2) வீட்டை
(3) வீட்டுக்கு
(4) வீட்டோடு

( )

## A2 செய்யுள்/ பழமொழி

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/ பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

Q7 கற்க கசடற கற்பவை ______________
நிற்க அதற்குத் தக.

(1) அறிந்தபின்
(2) படித்தபின்
(3) கற்றபின்
(4) பயின்றபின்

( )

Q8 ______________ அறியாமல் காலை விடாதே.

(1) ஆழம்
(2) அளவு
(3) வேகம்
(4) தூரம்

( )

Q9 ______________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) இன்னொருவன்
(2) உப்பிட்டவன்
(3) உரியவன்
(4) உடையவன்

( )

Q10 தன் ______________ தனக்கு உதவி.

(1) அறிவே
(2) உயிரே
(3) கையே
(4) கல்வியே

( )

Q11 காலத்தினாற் செய்த ______________ சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) உதவி
(2) நன்றி
(3) நன்மை
(4) செயல்

( )

Q12 ______________ கல்வி சிலையில் எழுத்து.

(1) முதுமையில்
(2) இளமையில்
(3) வறுமையில்
(4) ஏழ்மையில்

( )

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

ஊருக்கு உழைத்து வாழ்ந்து திருப்தி அடைந்தவர்கள் பலர். அவர்களில் ஒருவர் கிறிஸ்டோபர் என்பவராவார். அவர் ஓர் ஆற்றங்கரையின் அருகில் வாழ்ந்து வந்தார். ஆழமான அந்த ஆறு எளிதாகக் கடக்க முடியாத அளவுக்கு ஆபத்தான இடம். அந்தப் பெரியவர் நல்ல உயரமும் பலமும் கொண்ட உடலைப் பெற்றிருந்தார். பிறருக்காக உழைப்பதே பேரின்பம் என்ற எண்ணமுடையவர். எனவே, அந்த வழியாக ஆற்றைக் கடக்க முயலுவோர்க்கு எப்போதும் அவர் உதவியாக இருப்பார். வலுவான உடலும் நல்ல எண்ணமும் படைத்த அந்தப் பெரியவருக்கு வாழ்விலே குறிக்கோள் இருந்தது. இறைவனைக் கண்ணாரக் காண வேண்டும் என்பதுதான் அந்த லட்சியம். அந்த லட்சியத்தை அடைய பேராவல் கொண்டார்.

ஒரு நாள் அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அச்சமயம் ஒரு குழந்தை, "கிறிஸ்டோபர்! கிறிஸ்டோபர்!" என்று அழைக்கும் குரல் கேட்டு, அவர் கண் விழித்தார். "கிறிஸ்டோபர், என்னை அக்கரைக்குத் தூக்கிச் செல்!" என்று குழந்தைக் கூச்சலிட்டது. அவர் கைத்தடியுடன் தள்ளாடியவாறு வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தார். குழந்தை தனியாக நின்று கொண்டிருந்தது. அருகில் ஒருவரையும் காணவில்லை. அவர் அக்குழந்தையைத் தோளில் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்தார். அவர் ஆற்றில் இறங்கி நடக்க, நடக்கத் தோளில் இருந்த குழந்தையின் எடை அதிகரித்துக் கொண்டே இருந்தது. பாரத்தைத் தாங்க முடியாமல் அவர் கால் இடறியது. தட்டுத் தடுமாறிக் கொண்டு எப்படியோ அக்கரை சேர்ந்தார். குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, "அப்பா! உன்னைத் தூக்கியது இந்தப் புவியைச் சுமந்தது போல் இருந்தது," என்றார்.

"அதில் என்ன ஆச்சரியம்! இந்த உலகம் மட்டுமின்றி அதைப் படைத்தவனையும் சேர்த்துத் தானே நீ சுமந்தாய்! பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் எனக்குத் தொண்டு புரிந்தாய். உன் கைத்தடியை அந்த வீட்டின் வாசலில் ஊன்றி வை. அது நாளைக்கே பூத்துக் காய்ப்பதைக் காண்பாய். நீ போற்றித் தொழும் இறைவன் நானே என்பதற்கு அதுவே சான்றாய் அமையும்." என்று கூறிவிட்டு அக்குழந்தை மறைந்துவிட்டது.

கிறிஸ்டோபர், அக்குழந்தை வடிவில் வந்து கூறிய இறைவனின் கட்டளையை நிறைவேற்றினார். மறுநாள் காலை உண்மையிலேயே அவருடைய கைத்தடி ஓர் அழகான பேரீச்ச மரமாக இருந்தது.

**Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

13. மக்கள் ஏன் ஆற்றைக் கடக்க சிரமப்பட்டனர் ?

1. ஆறு ஆபத்தான இடமாக இருந்ததால்
2. ஆற்று நீர் ஆழமாக இருந்ததால்
3. ஆற்று நீர் நிறைந்து இருந்ததால்
4. ஆற்றை எளிதாக கடக்க முடியாததால்

( )

14. அவருக்கு ஏற்பட்டிருந்த பேராவல் என்ன ?

1. இறைவழிபாடு செய்ய வேண்டும்
2. இறைவனுக்கு உதவியாக இருக்க வேண்டும்
3. இறைவனுடன் பேச வேண்டும்
4. இறைவனை நேரில் காண வேண்டும்

( )

15. பெரியவர் ஏன் ஆற்றைக் கடக்கும் போது சிரமப்பட்டார் ?

1. அவரால் நடக்க முடியாததால்
2. அவருக்கு தூக்கமயக்கமாக இருந்ததால்
3. அவரால் குழந்தையைத் தூக்க முடியாததால்
4. அவருடைய கால் வலு இழந்ததால்

( )

16. கைத்தடியைப் பேரீச்ச மரமாக மாற்றச் செய்ததன் நோக்கம் என்ன ?

1. பெரியவரின் அன்புக்கு ஈடு செய்ய
2. இறைவன் காட்சியளித்தை உண்மை என்று காட்ட
3. பேரீச்சம் பழத்தைப் பெரியவருக்குக் கொடுக்க
4. இறைவனுக்குத் தொண்டு புரிய

( )

17. இக்கதை உணர்த்தும் உண்மை யாது ?

1. இறைவழிபாடு முக்கியம்
2. தொண்டு செய்து வாழ வேண்டும்
3. கடவுளைக் காண வேண்டும்
4. ஆற்றைக் கடக்க உதவ வேண்டும்

( )

**B4 சொற்பொருள்**

**Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(6 மதிப்பெண்கள்)**

18. எளிதாக

1. கடினமாக
2. சுலபமாக
3. மகிழ்ச்சியாக
4. பலமாக

( )

19. கூச்சலிட்டது

1. அழுதது
2. சிரித்தது
3. கத்தியது
4. கேட்டது

( 1 )

20. தொண்டு

1. சேவை
2. வேலை
3. பரிசு
4. பணி

( 1 )

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:**




**அழைப்பிதழ்**

இடம் – 32, சிராங்கூன் சாலை

தேதி – 25 டிசம்பர் 2013

நேரம் – காலை மணி 11.00

பொன் மாளிகை கடைத் திறப்பு விழாவை முன்னிட்டு, சலுகைகள் வழங்கப்படும்!

- வாங்கப்படும் நகைகளுக்கு செய்கூலி இல்லை!
- 1500 வெள்ளிக்கு மேல் நகை வாங்குபவர்களுககு ஒரு கைக்கடிகாரம் அன்பளிப்பாக வழங்கப்படும.
- முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு 2 கிராம் தங்கக்காசு வழங்கப்படும்.

**Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(6 மதிப்பெண்கள்)**

Q21. பொன் மாளிகை கடை உரிமையாளர்கள் என்ன செய்ய இருக்கின்றனர்?

(1) விளம்பரம்
(2) திறப்பு விழா
(3) வரவேற்பு
(4) மூடும் விழா

( )

Q22. 1500 வெள்ளிக்கு மேல் நகை வாங்குபவர்களுக்கு என்ன அன்பளிப்பாக வழங்கப்படும்?

(1) செய்கூலி இலவசம்
(2) 2 கிராம் தங்கக்காசு
(3) ஒரு கைக்கடிகாரம்
(4) 1 கிராம் தங்கக்காசு

( )

Q23. 2 கிராம் தங்கக்காசு பெற என்ன செய்ய வேண்டும்?

(1) 1500 வெள்ளிக்கு மேல் நகை வாங்க வேண்டும்
(2) காலை 11 மணிக்கு முன் வரிசையில் நிற்க வேண்டும்
(3) 50வது வாடிக்கையாளராக இருக்க வேண்டும்
(4) முதல் 50 வாடிக்கையாளர்களில் ஒருவராக இருக்க வேண்டும்

( )

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q24 நேற்று மீரா கடற்கரைக்குச் சென்றாள். அங்கே அவள் மணலை ________________ வாளியில் போட்டாள். Q24 (   )

Q25 தீபாவளி அன்று என் பெற்றோர் வீடு முழுவதும் தீபங்கள் ஏற்றி வைத்தனர். அவற்றின் ________________ மிக பிரகாசமாக இருந்தது. Q25 (   )

Q26 தொழிற்சாலையில் ________________ தீயை வெகு விரைவில் தீயணைப்பாளர்கள் அணைத்ததால் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. Q26 (   )

Q27 நான் என் குடும்பத்தோடு மேடான் நகருக்குச் சென்றேன். அங்கே நாங்கள் தோபா ________________ என்ற அழகிய நீர்தேக்கத்தைக் கண்டோம். Q27 (   )

Q28 கலா மருத்துவமனைக்குச் சென்று ஊசி போட்டாள். அவள் ________________ தாங்க முடியாமல் அழுதாள். Q28 (   )

| | |
|---|---|
| (1) அள்ளி | (2) ஏரி |
| (3) ஒளி | (4) எரிந்த |
| (5) ஏறி | (6) வலி |
| (7) எறிந்த | (8) அல்லி |
| (9) ஒலி | (10) வழி |

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| ஒரு காட்டில் யானைக் கூட்டம் ஒன்று ஒற்றுமையாக வாழ்ந்து வந்தது. அங்கு வழி (Q29) __________ சென்ற ஓர் எருமை வந்து சேர்ந்தது. அந்த எருமை, யானைக் கூட்டத்தோடு சேர்ந்து வாழ நினைத்தது. அது தனது (Q30) ____________ யானைக் கூட்டத்திடம் தெரிவித்தது. | Q29 ( )<br>Q30 ( ) |
| யானைகள் புதிய நண்பனை ஏற்றுக் கொள்வதற்கு முன் அந்தக் காட்டில் (Q31) ___________ வேண்டிய விதிமுறைகளை விளக்கின. அதில் ஒன்று, அந்தக் காட்டிலுள்ள குளத்திற்கு (Q32) _________ கொடுப்பதாகும். | Q31 ( )<br>Q32 ( ) |
| அந்தக் குளத்தில் இறங்கி அதனை அசுத்தப்படுத்தக் கூடாது என்பது அந்த யானைக்கூட்டத்தின் (Q33) _________. யானைக் கூட்டத்தின் (Q34) ___________ ஏற்றுக்கொள்வது போல் எருமை தன் தலையை ஆட்டியது. ஆனால், எருமை அதன்படி நடந்து கொள்ளவில்லை. | Q33 ( )<br>Q34 ( ) |
| யானைக் கூட்டத்திற்குப் பிடிக்காத செயல்களை எருமை (Q35) ___________செய்து வந்தது. சில வேளைகளில் எருமை குளத்தில் குளிப்பது போல் நடித்து யானைக் கூட்டத்தை ஏமாற்றி வந்தது. | Q35 ( ) |
| ஒருநாள் யானைகள் பார்க்காத பொழுது எருமை குளத்தில் இறங்கி குளித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென்று எருமையின் கால்கள் கரையில் நன்றாகச் சிக்கிக்கொண்டன. எருமை "என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கத்தியது. எருமை தங்களை ஏமாற்றுவதாக நினைத்து யானைக் கூட்டம் அதற்கு உதவி செய்யவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| 1) பார்த்து | 4) தினமும் | 7) விதிமுறையை | 10) கடைப்பிடிக்க |
| 2) கட்டளை | 5) அடிக்கடி | 8) ஏமாற்றி | 11) விருப்பத்தை |
| 3) தெரிந்துகொள்ள | 6) தவறி | 9) மரியாதை | 12) மீண்டும் |

D8 சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

அரசன் ஒருவன் வேட்டையாட வீரர்களுடன் காட்டிற்குச் சென்றான். களைப்படைந்த அவன் அங்கிருந்த ஏரிக்கரையில் தங்கினான். ஏரியைப் பார்த்த அவன் வியப்படைந்தான். அதன் நடுவில் இரத்தின மாலையொன்று பளபளத்துக் கொண்டிருந்தது. வீரர்களைப் பார்த்து அவன், "ஏரியில் குதியுங்கள். அந்த இரத்தின மாலையைத் தேடி எடுத்து வாருங்கள்", என்று கட்டளையிட்டான். வீரர்கள் பலர் ஏரிக்குள் குதித்தார்கள். யாராலும் அந்த மாலையை எடுத்து வர முடியவில்லை. தண்ணீரை இறைத்தால் மாலை கிடைக்கும் என்று அரசன் திண்ணமாக நம்பினான். உடனே தன் நாட்டு மக்கள் எல்லாரையும் அங்கு வரவழைத்தான். ஏரித் தண்ணீரை இறைக்குமாறு கட்டளையிட்டான். தண்ணீர் முழுவதையும் அவர்கள் இறைத்தனர். பிறகு சேற்றில் இறங்கி இரத்தின மாலையைத் தேடினார்கள். அப்படியும் இரத்தின மாலை கிடைக்கவில்லை.

மீண்டும் ஏரியில் தண்ணீர் நிரம்பியது. அதன் நடுவில் இரத்தின மாலை தெரிந்தது. மீண்டும் அரசன் தண்ணீரை இறைக்கச் சொன்னான். அப்பொழுதும் மாலை கிடைக்கவில்லை. இதனால், மன்னன் மிகக் குழப்பமுற்று இருந்தான். அப்போது தன் நாட்டிலுள்ள அறிஞர் ஒருவரின் நினைவு அவனுக்கு வந்தது. அரசன் அவரை வரவழைத்தான். அறிஞரிடம் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றிக் கூறினான். எப்படியாவது அந்த இரத்தின மாலைஅயை எடுக்கும் வழியைக் கண்டுபிடிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டான். அறிஞர் ஆழ்ந்து சிந்தித்தார். இரத்தின மாலை ஏரிக்குள் இருக்க வாய்ப்பில்லை. அப்படி இருந்திருந்தால் அரசருக்குக் கிடைத்திருக்கும். வேறு எங்கே இஎருக்கும் என்றெள நாலா பக்கமும் பார்த்தார்.

ஏரிக் கரையில் உயர்ந்து வளர்ந்திருந்த பனை மரத்தைப் பார்த்தார். அதன் பின்னாலிருந்து கதிரவனின் ஒளிக் கதிர்கள் வீசிக் கொண்டிருந்தன. அந்த ஒளி ஏரியில் விழுந்தது. உண்மை அவருக்குப் புரிந்தது. இந்த மரத்திலுள்ள கூட்டில்தான் மாலை இருக்க வேண்டும். அதன் பிம்பமே ஏரியில் தெரிகிறாது என்ற முடிவுக்கு வந்தார். ' அரசே! ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொல்லுங்கள்", என்றார் அவர். பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அப்பாத்திரத்தை அறிஞர் ஏரிக்கரையில் வைத்தார். அதில் இரத்தின மாலை தெரிந்தது.

அறிஞர் அதை அரசரிடம் காட்டி, " அரசே! இரத்தின மாலை ஏரியில் இல்லை. அதன் பிம்பம்தான் ஏரியில் தெரிகிறது. அதே பிம்பம் பாத்திரத்திலுள்ள தண்ணீரிலும் தெரிகிறது. கரையிலுள்ள பனை மரத்தில் பறாவைக் கூடு உள்ளடு. அந்தக் கூட்டில் இரத்தின மாலை இருக்க வேண்டும். வீரர்களை மரத்தில் ஏறி எடுத்து வரச் சொல்லுங்கள்", என்றார். அவ்வாறே வீரர்கள் இரத்தின மாலைஅயை எடுத்து வந்தார்கள். அரசன் மாலையைப் பார்த்து மகிழ்ந்தான். அவன் அறிஞரின் அறிவுக் கூர்மையை மிகவும் பாராட்டினான்.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. அரசன் எப்போது இரத்தின மாலையைப் பார்த்தான் ? (3)

37. னரசன் ஏரியிலுள்ள தண்ணீரை ஏன் இறைக்கச் சொன்னான்? (3)

38. அரசன் ஏன் குழப்பமுற்றான்? (3)

39. அரசன் தன் நாட்டிலுள்ள அறிஞரை ஏன் அழைத்து வரச் சொன்னார்? (3)

40. நாலா பக்கம் பார்த்த அறிஞருக்கு என்ன உண்மை விளங்கியது? (4)

____________________________________________________________

41. அறிஞர் எவ்வாறு அரசனுக்கு உண்மையை விளக்கினார்? (4)

Primary - 5

**P5 SA2**
**TESTPAPER 14**

ஓர் ஊரில் மதியழகர் என்ற......

1. 2 2. 2 3. 4 4. 2 5. 1 6. 3

7. 3 8. 1 9. 4 10. 3 11. 2 12. 2

13. 2 14. 4 15. 3 16. 2 17. 2

18. 2 19. 3 20. 1

21. 2 22. 3 23. 4

24. 1 25. 3 26. 4 27. 2 28. 6

29. 6 30. 11 31. 10 32. 9 33. 2 34. 7 35. 5

36. வீரர்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்று களைப்படைந்து அங்கிருந்த ஏரிக்கரையில் தங்கியபோது அதன் நடுவில் இரத்தின மாலையைப் பார்த்தான்.

37. வீரர்கள் ஏரிக்குள் குதித்தும் இரத்தின மாலையை எடுத்து வர முடியாத போது தண்ணீரை இறைத்தால் மாலை கிடைக்கும் என்று அரசன் திண்ணமாக நம்பியதால் ஏரியில் உள்ள தண்ணீரை இறைக்கச் சொன்னான்.

38. ஏரியில் தண்ணீரை இறைத்தும் ஏரிக்குள் மீண்டும் மீண்டும் தண்ணீர் நிரம்பி இரத்தின மாலை தெரிந்தது. தண்ணீரை இறைத்தும் மாலை கிடைக்காததால் அரசன் குழம்பினான்.

39. ஏரிக்குள் இருக்கும் இரத்தின மாலையை எப்படியாவது எடுக்கும் வழியைக் கண்டுபிடித்து கூற வேண்டும் என்பதால் அரசன் தன் நாட்டில் உள்ள அறிஞரை அழைத்து வரச் சொன்னான்.

40. நாலா பக்கமும் பார்த்த அறிஞருக்கு ஏரிக்கரையில் இருந்த பனை மரத்தில் உள்ள கூட்டில்தான் இரத்தின மாலை இருக்க வேண்டும் என்றும் அதன் பின்னாலிருந்து வீசும் கதிரவனின் ஒளிக் கதிர்கள் இரத்தின மாலையில் பட்டு அதன் பிம்பமே ஏரியில் தெரிகிறது என்ற உண்மை விளங்கியது.

41. அறிஞர் ஏரிக்கரையில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அதில் இரத்தின மாலையின் பிம்பத்தைக் காட்டி, மாலை ஏரிக்குள் இல்லை, பனை மரத்திலுள்ள கூட்டில்தான் உள்ளது என்றும் அதன் பிம்பமே ஏரியிலும் பாத்திரத் தண்ணீரிலும் தெரிகிறது என்று கூறி அரசனுக்கு உண்மையை விளக்கினார்.